**கல்நேவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்நேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா. 129,246 மீளாய்வாண்டின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டமையினால் செலவுகள் அத்தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட 8 திட்டங்களின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதிகள் சரியாகக் கணக்கிடப்படாததன் காரணமாக நிர்மாணக் கடன்பட்டோர் ரூபா. 1,033,885 மற்றும் நிர்மாணக் கடன்கொடுத்தோர் ரூபா. 53,413 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

சபையினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் உள்ளவாறு ரூபா 44,434,,031 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அத்தொகையில் ரூபா 1,059,493 தொகை 2 ஆண்டுகளுக்கும் 8 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சபையினால் செயற்படுத்தப்பட்ட 13 செயற்திட்டங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 45,596,460 ஆன சபையினால் செயற்திட்ட கடன்கொடுத்தோரிடமிருந்து ரூபா 1,082,088 தொகை 2 ஆண்டுகளுக்கும் 8 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட 22 செயற்திட்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டியிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i. நி.பி 396(ஆ) | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றன் பிரகாரம் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 8,950 தொகையான 03 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| ii. நி.பி 571 | ரூபா 92,000 தொகையான 68 வைப்புக்கள் தொடர்பாக வைப்பாளர்களுக்கு கொடுப்பனவிற்கோ அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,520,361 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,991,585 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| குப்பை வரி | 573,300 | 1,084,600 | 144,950 | 939,450 | 573,500 |
| கடை வாடகை | 138,600 | 451,500 | 50,000 | 388,722 | 151,378 |
| குழாய்கிணறு கட்டணங்கள் | 156,900 | 500 | - | 200 | 157,200 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 110,575 | - | - | - | 110,575 |
| கேள்விக் கட்டணம் | 303,743 | 554,150 | 5,000 | 553,650 | 299,243 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 6,223,542 | 6,678,255 | 1,143,695 | 6,223,542 | 5,534,560 |
| நிர்மாண மற்றும் வியாபார வரி | - | 1,340,500 | - | 1,135,900 | 204,600 |
| நிர்மாண மற்றும் வியாபார வரி | - | 536,740 | - | 408,490 | 128,250 |
| முத்திரைக் கட்டணங்கள் | 314,550 | 265,000 | - | - | 579,550 |
| மொத்தம் | 7,821,210 | 10,911,245 | 1,343,645 | 9,649,954 | 7,738,856 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,821,210 ஆன நிலுவை வருமானங்களிலிருந்து ஆண்டில் ரூபா 1,343,645 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்திலிருந்து 2 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 வீதவரியும் வரிகளும்**

**(அ) வீதவரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(i) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பகுதிகளைக் குறிப்பிட்டு அப்பிரதேசத்தில் அமைந்துள்ள அசையாத சொத்துக்கள் அல்லது அசையும் சொத்து வகையொன்றின் ஆண்டுப் பெறுமதியை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 288 பிரிவுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கழிவுப்பொருள் வரி ரூபா 573,500 தொகையை பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

**(அ) முத்திரைக் கட்டணங்கள்**

மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் திட்டவட்டாக ரூபா 265,000 தொகையான முத்திரைக் கட்டண வருமானமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து எவ்வித கட்டணமொன்றும் மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம்**

2017 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 6,223,542 நீதிமன்றத் தண்டப் பணத்திலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 1,143,695 அல்லது 18 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 வியாபார அனுமதிப்பத்திரம்**

522 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 110,575 ஆன வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால்

நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்பாடுகளை மேற்கொள்வதில் உள்ள தாமதம்**

மீளாய்வாண்டிலும் முன்னைய வருடங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய 17 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக ரூபா. 2,876,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் அத்திட்டங்கள் 2018 ஜுன் 20 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் வழங்காமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதேச சபையின் வருமான ஈட்டலுக்காக புறநெகும வேலைத்திட்டத்தினூடாக ரூபா. 14,796,235 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த புல்நேவ வாராந்த சந்தைக் கட்டிடம் மற்றும் மலசலகூடம் ஆகியன தேவைக்காகப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) 2014 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா. 28,500,000 செலவில் கல்நேவ நகரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பொதுக் கேட்போர் கூடம் 2018 ஜுன் 20 ஆம் திகதி வரை குறித்த தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையினால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களில் உக்கலடையாத கழிவுப்பொருட்கள் பிளிசறு செயற்திட்டத்தின் அருகில் அரச காணியில் வெளியேற்றப்பட்டு வந்தது. இந்த கழிவுப்பாருட்கள் சுற்றாலுடன் சேர்வதால் பிரதேசவாசிகளுக்கு சுகாதார சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேர்வதுடன் உக்காத கழிவுப்பொருட்களை எரிப்பதால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்பட்டு வந்தது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவச் செயற்றிறனின்மை**

பிரதான அமைச்சினால் 2010 ஆம் ஆண்டு பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த டிரக்டர் வண்டி 2018 ஜுலை 31 ஆம் திகதி வரை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அதேவேளை இதற்கான காப்புறுதி மேவுகையொன்றும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

வருடக் கணக்காக ரூபா 1,638,000 பெறுமதியான 25 உபகரண அலகுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 02 திட்டங்களுக்கான கொடுப்பனவு வழங்கும் பொழுது நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா. 544,955 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கந்துகிச்சாகம குளம் வரையிலான பாதையின் 200 மீற்றர் வரை அச்சுக்கல் பதிக்கும் திட்டத்திற்காக ரூபா 900,000 செலவிடப்பட்டிருந்தது. இங்கு செலவுத் தலைப்பு இலக்கம் 03 இன் கீழ் மணல் இட்டு நிலம் பதப்படுத்தப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் ரூபா. 131,932 மற்றும் பிழையான விலைகளின் அடிப்படையில் பாதீடு தயாரிக்கப்பட்டமையினால் ரூபா. 39,600 என மொத்தம் ரூபா. 171,532 முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட தினத்தில் பாதையின் இரு மருங்குகளும் சரிந்திருந்தன.

(இ) தியமெட்டியாகம பாதையின் 200 மீற்றர் வரை இணை அச்சுக்கல் பதிக்கும் திட்டத்திற்காக ரூபா. 899,100 செலவிடப்பட்டிருந்தது. செலவுத் தலைப்பு இலக்கம் 02 இன் கீழ் கொங்ரீட் சுவர் குறித்த அளவில் மேற்கொள்ளப்படாமை மற்றும் செலவுத் தலைப்பு இலக்கம் 03 இன் கீழ் 75 மி.மீ மணல் இட்டு நிலம் பதப்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக ரூபா. 159,400 கூடுதலாகவும், பிழையான விலைகளின் அடிப்படையில் பாதீடு தயாரிக்கப்பட்டமையினால் ரூபா. 39,600 என மொத்தம் ரூபா. 199,000 முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் 06 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்களுக்கு ஒப்பாக உள்ளவாறான வருமானம் 83 சதவீதத்திலிருந்து 189 சதவீதம் வரையான விலகலொன்றும் 05 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 12 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை 2016 மே 11 ஆந் திகதிய என்சீபீ/சீஎஸ்/01 கணக்காய்வு ஆம் இலக்க வடமேல் மாகாண தலைமைச் செயலாளரின் சுற்றறிக்கையின்யின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
| --- | --- | --- |
| (அ) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பாடமை |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை |
| (இ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | i காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை<br>ii நீண்டகாலம் இருந்து வரும் மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்யப்படாமை |
| (ஈ) | ஊழியர் முகாமைத்துவம் | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை |